<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **80/2021** | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.ஜீவானந்தம் | | | |
| **Date** | **:** | **18.02.2026** | | | |
| **Time** | **:** | **11.12 a.m to 12.03 p.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.ஜீவானந்தம் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தொ.சா.ஆ.**6** நிர்வாக தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் என்றால் ஆமாம். அந்த பதிலில் மனுதாரர் சங்கம் சார்பாக எழுப்பப்பட்ட 17 கோரிக்கைகளுக்கும் குறிப்பிட்டு மறுப்பு எதுவும் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனத்தில் Grade சிஸ்டம் உள்ளதா என்றால் உள்ளது. Grade-I,II என்ற நிலைகள் உள்ளன. Grade-I-கீழ் ஐடிஐ, டிப்ளமோ படித்தவர்கள் இருப்பார்கள். மேலும் ஐந்து முதல் 6 வருட அனுபவம் வாய்ந்தவர்களும் இருப்பார்கள். Grade-II-ல் ஐந்து வருடத்திற்கும் குறைவான அனுபவம் உள்ளவர்கள் இருப்பார்கள். Grade பிரிப்பது சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தில் பாலிசி உள்ளது. அதனை தாக்கல் செய்ய இயலும். ஐவர் குழு சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தில்

கடைசியாக எப்போது தேர்தல் நடைபெற்றது என்றால் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. அந்த ஐவர் குழு நிர்வாகத்திற்கு கோரிக்கை எதுவும் கொடுத்து உள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். எந்த தேதியில் கொடுத்தார்கள் என தற்போது ஞாபகத்தில் இல்லை. ஐவர் குழுவை அங்கீகரித்து தொழிலாளர் கடிதம் எதுவும் கொடுத்தார்களா என்றால் தீர்மானம் இயற்றி கொடுத்தார்கள். அந்த தீர்மானத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால் அது தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டது என்பதால் அவர்களிடம் கேட்டு கிடைக்கப்பெற்றால் தாக்கல் செய்ய இயலும். தற்சமயம் அதன் நகல் எங்கள் வசம் இல்லை. அதுபோன்று தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை என்றாலும் அவ்வாறு இருந்திருந்தால் அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றாலும் தீர்மானம் இயற்றப்பட்டதாக பின் யோசனையுடன் சொல்கிறேன் என்றாலும் மறுக்கப்படுகிறது. ஐவர் குழு கொடுத்த கோரிக்கையும் எந்த வழக்கில் சங்கம் கொடுத்த கோரிக்கையும் ஒன்று போல் உள்ளதா என்றால் அவற்றை பார்த்தால் தான் தெரியும். நி.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் கண்டுள்ளதா என்றால் அனைத்து கோரிக்கைகளும் உள்ளடக்கியதாக தெரியவில்லை. தொழிற்சங்கம் போடுவது போன்று தொழிலாளர்களை Skilled, Semi Skilled, Helper என்ற நிலையில் Grade நிர்ணயம்

செய்வதினால் நிர்வாகத்திற்கு என்ன இழப்பு ஏற்படும் என்றால் அது சம்பந்தமாக இப்போது தெரியவில்லை. அவர்களின் கோரிக்கை நியாயமானதாக தெரியவில்லை. எதன் அடிப்படையில் அவர்களின் கோரிக்கை நியாயமானதாக இல்லை என தெரிவிக்கிறேன் என்றால் எங்களுடைய நிறுவனம் சிறு தொழில் நிறுவனம் என்பதால் அந்த விதிகள் எங்களுக்கு பொருந்தாது என்பதால் அவ்வாறு சொல்கிறேன். எங்கள் நிறுவனம் MSME கீழ் நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யப்படவில்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். Annual Turn Over ரூபாய் 120 கோடி கூடுதலாக இருக்கும் காரணத்தினால் நாங்கள் MSME கீழ் வரமாட்டோம் என்றால் தெரியவில்லை. Annual Turn Over சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். DA-Allowance எதன் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றால் தெரியாது. 1960 Consumer Price Index முன்னிலைக்கு பஞ்சப்படி கேட்பது நியாயமானது என்றால் மறுக்கிறேன். ஒவ்வொரு தொழிலாளிக்கும் எவ்வளவு HRA வழங்கப்படுகிறது என்றால் தெரியவில்லை. எனக்கு எவ்வளவு HRA வழங்கப்படுகிறது என்றால் ஞாபகம் இல்லை. ஒவ்வொரு தொழிலாளிக்கும் எவ்வளவு சம்பளம் வழங்கப்படுகிறது அவர்கள் பெறும் சலுகைகள் என்ன என்பது பற்றி எனக்கு தெரியாது இந்த வழக்கு சம்பந்தப்பட்ட

கோரிக்கைகள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் தவறு. அவ்வாறு தெரிந்திருந்தால் தொழிலாளர்களுக்கு எவ்வளவு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறது என்று விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் மறுக்கிறேன். நான் ஆபரேஷனல் மேனேஜராக உள்ளேன். தொழிலாளர்களின் சம்பள விபரம் யாருக்கு முழுமையாக தெரியும் என்றால் HR துறையில் உள்ளவர்களுக்கு தான் தெரியும். HR துறையில் மேலாளர் தான் மூத்த நிலை அதிகாரி ஆவார். அந்த மேலாளருக்கு தொழிலாளர்களின் சம்பள விவரம் தெரியும். எங்கள் நிறுவனத்தில் ஷிப்ட் Allowance வழங்கும் வழக்கம் உள்ளது. ஒவ்வொரு நிலை தொழிலாளர்களுக்கும் எவ்வளவு ஷிப்ட் Allowance வழங்கப்படுகிறது என்றால் இரவு பணி பார்ப்பவர்களுக்கு மட்டும்தான் ரூபாய் 30 என கணக்கிட்டு இரவு பணிபடி வழங்கப்படுகிறது. பத்தி 30 ல் சொல்லி உள்ள சங்கதிகளை நிரூபிக்க ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை. மனுதாரர் தொழிற்சங்கத்தின் Byelaw படித்து பார்த்தது இல்லை. மனுதாரர் தொழிற்சங்கம் பொது தொழிலாளர் சங்கம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் தொழிற்சங்கத்திற்கும் எங்கள் நிறுவனத்திற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என தெரிவித்து அவர்களுக்கு கடிதம் எதுவும் அனுப்பப்பட்டதா? என்றால் தற்போது ஞாபகம்

இல்லை அவ்வாறு அனுப்பியது போன்று தெரியவில்லை. மனுதாரர் தொழிற்சங்கமானது MEPZ-ல் இயங்குகிறது என்றும் எங்கள் தொழிற்சாலை ஆனது இருங்காட்டுக்கோட்டையில் இயங்குகிறது என்பதாலும் அவர்களுக்கு எங்கள் நிறுவனம் சார்பாக கோரிக்கை வைக்க உரிமை இல்லை என தொழிலாளர் ஆணையர் முன் தாக்கல் செய்த பதிலில் (தொ.சா.ஆ.6) தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை அமல்படுத்தும் போது எங்கள் நிர்வாகத்திற்கு எவ்வளவு கூடுதல் செலவாகும் என்பது சம்பந்தமாக என்னுடைய சாட்சியத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்திற்கும் மனுதாரர் தொழிற்சங்கத்திற்கும் இடையே ஆரம்பத்திலிருந்து சுமூக உறவு இருந்ததா என்றால் தெரியவில்லை. எங்கள் நிறுவனத்திற்கும் மனுதாரர் தொழிற்சங்கத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை எதுவும் நடைபெற்றதா என்றால் தெரியவில்லை. எங்கள் நிறுவனத்தில் பாதுகாக்கப்பட்ட தொழிலாளி என்ற நிலையில் யாரும் உள்ளார்களா என்றால் இல்லை. மனுதாரர் தொழிற்சங்கத்திற்கு எங்கள் நிறுவனத்தால் அங்கீகாரம் எதுவும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தொழிற்சங்கம் ஏதாவது எங்கள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்றால் எங்கள் நிறுவனத்தில் தொழிற்சங்கம் எதுவும் செயல்படவில்லை ஐவர் குழு மட்டுமே உள்ளது. எங்கள் கம்பெனியின் தொழிலாளர்கள்

மனுதாரர் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால் ஒரு சிலர் இருக்கிறார்கள். தற்சமயம் ஏழு தொழிலாளர்கள் மட்டும்தான் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளார்கள். தொழிற்சங்கத்தின் உறுப்பினர் பதிவேட்டை நான் பார்க்கவில்லை. மனுதாரர் தொழிற்சங்கத்தில் எத்தனை பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். எங்கள் நிறுவனத்தில் இருந்து எத்தனை பேர் உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று விவரம் தெரியும். எங்கள் நிறுவனத்தில் இருந்து தொழிற்சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சந்தா தொகை எதுவும் பிடித்து செலுத்தப்படும் வழக்கம் இல்லை. எங்கள் நிறுவனத்தில் உள்ள பெரும்பாலான தொழிலாளர்களை மனுதாரர் தொழிற்சங்கம் தான் பிரதிநிதித்துவம் செய்கிறது என்றால் இல்லை. மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளுக்கு ஆதாரப்பூர்வமான மறுப்பு எதுவும் எங்கள் நிறுவனம் சார்பாக தெரிவிக்கப்படாத காரணத்தினால் மனுபடி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:18.02.2026